# ஹிந்தி எதிர்ப்பு கூட்டம்.

## உண்ணா விரதம் இருக்கும் ஸ்டாலின் ஜெகதீசன் ஊர்வலம்.

(நமது நிருபர்)

சென்னை, மே. 9,

செ ஊ.னை பெத்து நாயக்கன் பேட்டை சிவஞானம் பார்க்கில் இருந்து நேற்று மாலை 4-மணிக்கு ஓர் பிர்மாண்டமான இந்தி எதிர்ப்பு ஊர்வலம் "இந்தி வேண்டாம்" "தமிழ் வாழ்க" என்ற தட்டிகளுடனும் "இந்தி வீழ்க" "தமிழ் வாழ்க" என்ற கோஷத்துடனும் உண்ணா விரதம் இருக்கும் ஸ்டாலின் ஜெகதீசன் அவர்களை ரிக்ஷா வண்டியில் அமரச்செய்து இந்தி எதிர்ப்புத் தொண்டர்களால் இழுக்கப்பட்டு பெத்துநாயக்கன் பேட்டையில் உள்ள முக்கிய வீதிகள் வழியாய் சற்று மாலை 6-30 மணிக்கு சிவ ஞானம் பார்க்குக்கு வந்து சேர்ந்தது.

பிறகு பச்சையப்பன்கல்லூரித் தமிழ் பண்டிதர் தோழர். மோசூர் கந்தசாமி முதலியார் பி. எ அவர்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பமாயிற்று. சுமார் 2000 பேருக்குமேல் கூடியிருந்தார்கள். தோழர்கள். எஸ். ரங்கநாதன், மறை. திருநாவுக்கரசு, சி. டி. நாயகம் சி. என். அண்ணாதுரை, எம். ஏ. தி. வி. முருகேசன், கா. ரா. கோவிந்தராஜ முதலியார் தமிழ்பண்டிதர் முதலியவர்கள் "இந்தி கட்டாய பாடத்தைக் கண்டித்து" பேசினார்கள்.

ஸ்டாலின் ஜெகதீசன் அவர்கள் தான் ஹிந்தி கட்டாயபாடமாக வைத்தால் 'சாகும் வரை உண்ணாவிரதமிருக்கப் போவதாகவும் கூறினார்"

ஜார்ஜ் டவுனில் ஹிந்தி கட்டாய பாடமாக வைத்துள்ள கிருஸ்தவ உயர்தர கலாசாலையிலும், ஹிந்து தியாலாஜிகல் உயர்தர கலாசாலையிலும் மறியல் செய்யப் போவதாகத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரம் கூற கூட்டம் இரவு 9 30 மணிக்கு முடிந்தது.